# ஆண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்வதனால் ஏற்படும் குடும்பவியல் தாக்கங்கள்: நிக்கவெவ கிராமத்தை மையப்படுத்திய ஆய்வு

# Family Impact of Men Visiting for the Foreign Employment: Research Based on Nikkawewa Village


**Ms. MS. Ismiya Begum (1), Mr. SMM. Mazahir (2) and Mr. YM. Shajahan (3)**

(1)Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka
(2) Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka
(3) Al-Sahwa Arabic College, Palamunai, Sri Lanka
(izzahis123@gmail.com)



**ஆய்வுச் சுருக்கம்**

*இன்று தொழில்வாய்ப்புத் தேடி ஆண்கள் வெளிநாடுகளுக்குச் செல்வது தவிர்க்க முடியாத ஒரு பொருளாதாரத் தேவையாக இருக்கின்ற அதேநேரம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் ஒரு சமூகப்பிரச்சினையாகவும் உருமாறியுள்ளது.பொருளீட்டல் என்பது ஆண்கள் மீதான பொறுப்பாகவும் கடமையாகவும் இருப்பதனை மறுக்க முடியாது. அதற்காக அவர்கள் பல்வேறு வழிமுறைகளைத் தெரிவு செய்து கொள்கின்றனர். அவற்றுள் வெளிநாட்டிற்குச் சென்று பொருளீட்டுவதும் பிரதான வழிமுறைகளில் ஒன்றாகும்குடும்பங்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு இது தீர்வாக அமைகின்றது. இருந்த போதும் மறுபுறம் பல்வேறு சமூக, குடும்பரீதியான பிரச்சினைகளுக்கும் இது காரணமாக இருக்கின்றது என்பதனையும் மறுப்பதற்கில்லை. குறிப்பிட்ட ஆய்வுப்பிரதேசத்தில் ஆண்கள் வெளிநாட்டிற்கு வேலைவாய்ப்புக்குச் சென்றமைக்கான காரணங்கள், ஆண்கள் வெளிநாட்டிற்குச் செல்வது தொடர்பான அல்லது வெளிநாட்டில் வேலை செய்வது தொடர்பான அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் விருப்புநிலை, ஆண்கள் வேலைவாய்ப்பிற்காக வெளிநாடு செல்வதனால் குடும்பவியல் ரீதியாக ஏற்பட்டுள்ள தாக்கங்கள், அவர்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பினால் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் தமது தேவைகளை நிவர்த்தி செய்தததில் அடைந்த திருப்திநிலை, போன்ற விடயங்களைக்கண்டறிவதனை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பொருளீட்டல் தொடர்பான இஸ்லாமிய நோக்கினை தெளிவுபடுத்தி,அதனூடாக இஸ்லாமிய அடிப்படையிலான குடும்ப வாழ்வை அமைத்துக் கொள்ளவதற்கான ஆலோசனைகளை வழங்குவதனையும், அவற்றின் மூலம் சிறந்த குடும்ப, சமூக அமைப்பை கட்டியெழுப்புவதற்கு அவர்களைத் தயார்படுத்தலையும் இவ்வாய்வு கருத்திற் கொண்டுள்ளது. இவ்வாய்வானது முதலாம் நிலைத்தரவுகளை மாத்திரம் மையப்படுத்தியதாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.*



**கலைச் சொற்கள்:** ஆண்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, குடும்பம், தாக்கங்கள்


## அறிமுகம்

குடும்பம் என்பது ஆணும் பெண்ணும் சட்ட ரீதியாக இணைந்து உருவாக்கும் ஒரு நிறுவனமாகும். இது சீராக அமையும் போதே தனிமனித வாழ்வும் சமூக வாழ்வும் ஆரோக்கியமுடையதாக அமைய முடியும். இதனால்தான் ஒரு குடும்பம் சீராக அமைவதற்கான அத்தனை வழிகாட்டல்களையும் இஸ்லாம் வழங்கியுள்ளது. அது குடும்ப வாழ்வில் ஆண், பெண் இருசாராரும் பெறவேண்டிய உரிமைகளையும், கடமைகளையும் வரையறுத்து சிறந்த குடும்ப வாழ்வுக்கான அழகிய வழிகாட்டல்களை முன்வைத்துள்ளது. அவற்றுள் பொருளீட்டல் என்ற பணி குடும்ப தலைவனான ஆணிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொருளீட்டுவதற்குரிய உடல்வலிமையும் மனோவலிமையும் அவனிடமே உள்ளது. இதனையே அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

***"பெண்களின் நிர்வாகிகளாக ஆண்களே இருக்கின்றனர். ஏனெனில் அவர்களில் ஒருவரைவிட மற்றவரை அல்லாஹ் மேன்மையாக்கி வைத்திருக்கிறான். அன்றி (ஆண்களாகிய) அவர்கள் தங்கள் பொருள்களை பெண்களுக்காக செலவு செய்கின்றனர்"** (4:34)*

அவன் ஷரீஆ வரையறைக்குள் நின்று அதனை நிறைவேற்ற வேண்டும் எனவும் இஸ்லாம் பணித்துள்ளது. அதாவது அவனது பணி மனைவி, பெற்றோர், பிள்ளைகள் ஆகியோரது

கடமைகளையும் உரிமைகளையும் உதாசீனம் செய்யும் அளவில் அமையக் கூடாது என்பதே இஸ்லாத்தின் நிலைப்பாடாகும்.

நவீனமயமாக்கமும் உலகமயமாக்கமும் சமூக அமைப்பில் பல்வேறு மாறுதல்களை ஏற்படுத்தி வருகின்றன. காலத்தின் வேகத்திற்கேற்ப ஆண்கள் தம்மை விரைவாக நகர்த்த வேண்டிய தேவைப்பாட்டிலும் உலக பொருளாதார அமைப்புக்கேற்ப தமது வாழ்வை திட்டமிட்டு அமைத்துக் கொள்ளவேண்டிய கட்டாயத்திலும் உள்ளனர். இதற்காக அவர்கள் பல்வேறு வழிமுறைகளைக் கைக்கொள்கிறனர். இவற்றுள் பொருளீட்டலில் முக்கிய பொறிமுறையாக இன்று வெளிநாட்டு வேலைவாய்ப்பினை அவர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். குறுகிய காலத்தில் பணம் சம்பாதித்தலும், தலைநிமிர்ந்து சமூகத்தில் வாழ்தலும் இவற்றின் நோக்கங்கள் என்று பெரும்பாலும் கூறப்பட்டாலும் இத்தகைய வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் சில சமயங்களில் அவர்களின் நோக்கங்கள் நிறைவேறாது போகவும், குடும்பக் கட்டமைப்பில் பல பிரச்சினைகள் உருவாகவும், அதனால் குடும்பங்கள் சீர்குலையவும் கூட காரணமாக இருந்து விடுகின்றது. அதேநேரம் பொருளாதார ரீதியாக ஒரு நாடு அந்நிய செலாவணியைப் பெற்றுக் கொள்வது மட்டுமன்றி தனிநபரும் சமூகங்களும் கூட பல நன்மைகளை அடைய இத்தகைய பயணங்கள் துணைசெய்கின்றன. எனவே, இவ்வாய்வானது குறிப்பிட்ட ஆய்வுப்பிரதேசத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பயணம் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதனைக் கண்டறியுமுகமாக முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற நிக்கவெவ எனும் கிராமத்தில் இருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ள ஆண்களையும் அவர்களது குடும்பங்களையும் மையப்படுத்திமேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தைப் பொறுத்தவரை சுமார் 130 குடும்பங்கள் உள்ளன. அவற்றுள் இப்பிரதேசத்தில் இருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு சென்றுள்ள ஆண்களின் குடும்பங்கள் மாத்திரம் தெரிவுசெய்யப்பட்டு, இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தைப் பொறுத்தவரை ஆண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தேடி சென்றுள்ளமையால் பொருளாதார ரீதியாக பல சாதகமான விளைவுகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் குடும்ப ரீதியாக இது பல பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது என்பதனை ஆய்வாளர்களால் அவதானிக்க முடிந்தது. எனவே, இத்தகைய தாக்கங்களையும் அதற்கானகாரணங்களையும் கண்டறிந்து, அவற்றைக் களைவதற்கான ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் சிறந்த குடும்ப அமைப்புக்கான வழிகாட்டல்களை வழங்குவதனையும் இவ்வாய்வு முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

இவ்வாய்வானது ஆண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றமைக்கான காரணங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் செல்வது பற்றிய அவர்களின் மனோநிலை, குடும்ப உறுப்பினர்களின் விருப்பு நிலை, குழந்தைகளின் நடைமுறைகளில் அவை ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள், பெண்களின், குழந்தைகளின் மனோநிலையில் அவை ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள், குடும்பத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார ரீதியான தாக்கங்கள், இத்தகைய வெளிநாட்டு வேலைவாய்ப்பு பயணங்கள் குடும்பத்தின் தேவைகளை நிறைவு செய்தலில் குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் பெற்றுள்ள திருப்தி நிலை போன்றவற்றைமையப்படுத்தியதாக மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, இறுதியில் இவை ஏற்படுத்தியுள்ள பாதகமான தாக்கங்களை களைவதற்கான சில ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**ஆய்வு இடைவெளி**

பொதுவாக பெண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்வதனால் ஏற்படும் தாக்கங்கள் தொடர்பான பல ஆய்வுகள் இடம்பெற்றுள்ள போதும்,ஆண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்வதனால் ஏற்படும் தாக்கங்களை மையப்படுத்தியதான ஆய்வுகள் இடம்பெற்றிருப்பது மிகமிக அரிதாகும். ஆய்வுப்பிரதேசத்தைப் பொறுத்தவரை இது தொடர்பான ஆய்வுகள் இதுவரை இடம்பெறவில்லை. எனவே, இந்த இரு இடைவெளிகளைக் கருத்திற் கொண்டதாக இந்த ஆய்வு இடம்பெற்றுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

குறிப்பிட்ட ஆய்வுப் பிரதேசத்தைப் பொறுத்தவரை ஆண்கள் வருமானம் ஈட்டுவதற்கான விவசாயம் சார்ந்த பல வழிமுறைகள் இருந்தபோதும் அதிகமானோர் வெள்நாட்டு வேலைவாய்ப்பினையே தமது பொருளீட்டுவதற்கான வழிமுறையாக தெரிவு செய்துள்ளனர். இதனால் குடும்ப அமைப்புக்களில் பலவேறு தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இவை இவ்வாய்வின் பிரச்சினைகளாக இனங்காணப்பட்டுள்ளன.

**ஆய்வின் நோக்கம்**

- ஆய்வுப்பிரதேசத்தில் இருந்துஆண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றமைக்கான காரணங்கள்,அது தொடர்பான அவர்களின் மனோநிலை, குடும்ப உறுப்பினர்களின் விருப்பு நிலை என்பவற்றைக் கண்டறிதல்
- குறிப்பிட்ட பிரதேசத்தில் ஆண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றமையால் குடும்ப உறுப்பினர்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதில் பெற்றுள்ள திருப்தி நிலையைக் கண்டறிதல்
- ஆண்களின் வெளிநாட்டுப்பயணம் குடும்ப அமைப்பில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை அடையாளப்படுத்தல்
- வேலை வாய்ப்புக்காக வெளிநாடுசென்றமையால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை தவிர்ப்பதற்கான ஆலோசனைகளை வழங்கல்

**ஆய்வு முறையியலும் தரவு சேகரிப்பும்**

இவ்வாய்வானது முதலாம் நிலைத்தரவுகளை மாத்திரம் மையப்படுத்தியதாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவுகளான அவதானம், ஒழுங்கமைக்கப்பட்ட வினாக் கொத்து, நேர்காணல் முதலிய முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக MS Excel பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலதிக தரவுகள் ஆய்வுக்களத்திற்கு நேரடியாகச் சென்று கலந்துரையாடியதன் மூலம் பெறப்பட்டன.

சிறந்த முடிவுகளைப் பெறுவதற்காக இக்கிராமத்தில் இருக்கும் 130 குடும்பங்களில் வெளிநாட்டு வேலைவாய்புக்குச் சென்றுள்ள ஆண்களின் குடும்பங்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டுள்ளன. சுமார் 30 குடும்பங்களை இவை உள்ளடக்கியுள்ளன. 30 குடும்பங்களில் இருந்தும் ஒரு குடும்பத்திற்கு ஒருவர் என்ற அடிப்படையில் நோக்க மாதிரி நுட்ப முறையின் அடிப்படையில் (Purpose Sampling) 30 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்துகள் வினியோகிக்கப்பட்டன. அவற்றுள் பூரணப்படுத்தப்பட்ட 30 வினாக்கொத்துகளும் மீளப் பெறப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. 30 குடும்பங்களில் இருந்தும் எழுமாறாக தெரிவுசெய்யப்பட்ட 20 குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 20 குடும்பங்களில் உள்ள உறுப்பினர்களில் இவ்விரண்டு பேர் என்ற அடிப்படையில் 40 பேர் நேர்காணலுக்குட்படுத்தப்பட்டனர். இவர்களுடன் மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக பிரதேசத்தின் கல்விமான்கள், பள்ளிவாயல் தலைவர், பள்ளிவாயல் நிர்வாகி போன்றோருடனும் விஷேட கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு திரட்டப்பட்டன. வேளிநாட்டுக்குச் சென்றுள்ள ஆண்களின் குடும்பங்கள் சில நேரடி அவதானத்திற்கும் உட்படுத்தப்பட்டன.

**கலந்துரையாடலும் பெறுபேறுகளும்**

குறிப்பிட்ட ஆய்வுப்பிரதேசத்தில் ஆண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு செல்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஆய்வுக்கெடுத்துக் கொள்ளப்பட்ட 30 குடும்பங்களில் இருந்தும் 33 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ளனர்.இவர்களில் 28 பேர் திருமணம் முடித்தவர்களாவர். இவர்கள் அனைவரும் 33 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இவர்களில் பெரும்பாலானோர் கடன் சுமை காரணமாகவும் வீட்டுப் பொருளாதாரச் சுமைகள் காரணமாகவும், உள்நாட்டில் போதிய வருமானம் பெற முடியாமல் இருப்பதாலும், பிள்ளைகளின் உயர்கல்வி செலவுகளுக்காகவும் குறுகிய காலத்தில் அதிக பணம் சம்பாதிக்கும் நோக்கிலும் சென்றவர்கள் என்ற விடயம் குறிப்பிட்ட ஆண்களின் குடும்ப உறுப்பினர்களை நேர்கண்டதன் மூலம் அறிய முடிந்தது.

இவர்களுள் 20 வருட காலமாக வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்புக்காக தொடர்ந்து சென்றுவரக் கூடியவர்களும் உள்ளனர். ஒரு சிலர் அடிக்கடி உள்நாட்டிற்கு வந்து மீண்டும் சென்றாலும் இன்னும் சிலர் வெளிநாட்டிலேயே நிரந்தரமாக தங்கி, அங்கேயே இன்னொரு திருமணம் முடித்தும் வாழ்வதாகவும் தகவல்கள் கிடைக்கப் பெற்றன.

குறிப்பிட்ட பிரசேத்தில் வதியும் ஆண்கள் வெளிநாட்டிற்குச் சென்றமையினால் குடும்ப உறுப்பினர்கள் ஏதேனும் பொருளாதார ரீதியான நன்மைகளை அடைந்துள்ளனரா என்பதனை கண்டறிவதற்காக குறிப்பிட்ட நபரின் குடும்ப அங்கத்தவர்களிடம் வழங்கப்பட்ட வினாக் கொத்துக்களில் இருந்து சில தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. அதன்படி தமது ஆண்கள் வெளிநாட்டிற்குச் சென்ற பின் குடும்பங்களின் அடிப்படையான தேவைகள் தவிர தொழில்களில் பணங்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும், கடன் பிரச்சினைகள ஓரளவு நீங்கியதாகவும், பெண் பிள்ளைகளுக்கு திருமணம் முடித்துக் கொடுத்ததாகவும், நகைகள், வீடுகள்,காணிகள், வாங்கியுள்ளதாகவும், பிள்ளைகளைகளின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் உதவியாக இருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். இவை தவிர சில சமூகத் தேவைகளையும் குறிப்பாக பாடசாலைகள், பள்ளிவாயல்களுக்கான உதவிகள் அவர்கள் மூலம் வழங்கப்பட்டதாகவும் அறிய முடிந்தது. இன்னும் சிலர் தமது ஹஜ் கடமைகளையும் நிறைவு செய்துள்ளனர்.என்றபோதும் பிள்ளைகள் கல்வி நடவடிக்கைகளில் பின்னடைவு, குடும்ப உறுப்பினர்களுக்கு கட்டுப்படாமை, அவர்களை மதிக்காமை, பிள்ளைகள் நவீன தொழிநுட்பங்களினால் பாதிப்புறல், ஆடம்பர மோகம்,தந்தையுடனான குழந்தைகளின் உறவிலும் கணவனுடனான மனைவியரின் உறவிலும்விரிசல்கள் ஏற்பட்டுள்ளமை,மனைவிமார் பிற ஆண்களுடன் தொடர்பு, உள்நாட்டுக்கு மீண்டும் வந்த பின் உள்நாட்டில் அவர்களுக்கு தொழில் புரியத் தெரியாமை, பெண்கள், குழந்தைகள் மனஅழுத்தத்திற்கு உட்பட்டுள்ளமை, ஆண்கள் உள்நாட்டுக்கு வரவிரும்பாமை, ஆண் பெண் இருபாலாரதும் உடல், உள தேவைகள் சரியாக நிவர்த்தி செய்யப்படாமை, கணவன்மாரின் ஏனைய குடும்ப உறுப்பினர்கள் மூலம் பிரச்சினைகள் மனைவிமாருக்கு ஏற்படுகின்றமை, மனைவிமார் உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் பிறரில் நீண்ட காலம் தங்கியிருக்க வேண்டிய தேவை, வெளிநாட்டில் இருக்கும் ஆண்கள் பிற பெண்களுடன் ஏற்படுத்தியுள்ள தொடர்புகளால் சமூகத்தில் பிள்ளைகளும் ஏனைய குடும்ப உறுப்பினர்களும் அவமானத்திற்கு உள்ளாகின்றமை,இளவயது பெண்களுக்கு குழந்தை இன்மை,குழந்தைகளுக்கிடையிலான கால இடைவெளி அதிகமாக இருத்தல் போன்ற பல்வேறு பாதகமான தாக்கங்களையும் இது ஏற்படுத்தியுள்ளது என்பதனை ஆய்வின் மூலம் அறிய முடிந்தது.

ஆண்கள் வெளிநாட்டுக்குச் செல்வது தொடர்பான அவர்களின் மனோநிலையை அறிந்து கொள்வதற்காக அவர்களில் சிலரிடம் மறைமுக உரையாடல் ஆய்வாளர்களால்

மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் சிலர் விரும்பியும் இன்னும் சிலர் தவிர்க்க முடியாத காரணங்களாலும் சென்றதாகவும் குறிப்பிட்டனர். மேலும் உள்நாட்டிற்கு மீண்டும் வந்த பின் மீண்டும் செல்வதற்கான மனோநிலை ஏற்படுவதாகவும் இதற்கு இங்கு வந்து தொழில் புரிவதன் மூலம் அதிக நஷ்டம் ஏற்படுவதாகவும், குடும்ப அங்கத்தவர்களின் ஆடம்பர செலவுகளைத் தவிர்க்க முடியாதுள்ளது எனவும், அதனால் செலவுகளுக்கு தாம் உள்நாட்டில் வருமானமாகப் பெறும் தொகை தமது குடும்ப செலவுகளுக்கு போதியதாக இல்லை எனவும், போதிய பணம் இன்மையால் குடும்பத்தில் பல பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.


ஆண்கள் வெளிநாட்டிற்கு செல்வது தொடர்பான அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் விருப்பு நிலையை அறிய அவர்களை நேர்கண்ட போது பெரும்பாலானோர் தமக்கு வெளிநாட்டிற்கு தமது குடும்ப ஆண்கள் செல்வது விருப்பமில்லை என்றே அதிகமான பெண்கள் குறிப்பிட்டனர். ஒரு சிலர் குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளையும், பிள்ளைகளின் கல்வி தேவைகளையும் கருத்திற் கொண்டு ஆண்கள் வெளிநாட்டிற்கு செல்வதனை விரும்புகின்றனர். இந்த விருப்பு நிலை ஒப்பீட்டளவில் மிகக் குறைவாகும்.

ஆண்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பயணத்தின் மூலம் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் தமது தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதில் எந்தளவு திருப்தி நிலையை அடைந்துள்ளனர் என்பதனைக் கண்டறிவதற்காக அவர்களிடம் வழங்கப்பட்ட வினாக்கொத்துக்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களில் இருந்து பெறப்பட்ட முடிவுகள் பின்வருமாறு:

| தேவைகள் | திருப்தி | மிகைத்திருப்தி | திருப்தி இல்லை |
|---|---|---|---|
| பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது | 13 (43.3%) | 02 (6.6%) | 15 (50%) |
| பிள்ளைகள் கல்வியில் முன்னேற்றம் | 12 (40 %) | 01 (3.3%) | 17 (56.6%) |
| பிள்ளைகளின் உளவியல் தேவைகள் பூரணமாக நிவர்த்தி | 05 (16.6%) | 0 | 25 (83.3%) |
| குழந்தைகள் நன்னடத்தையுடையவர்களாக உள்ளனர். | 09 (30% ) | 2 (6.6%) | 19 (63.3%) |
| அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதில் பிறரின் தயவில் தங்கியிருத்தல் அவசியமில்லை | 02 (6.6%) | 0 | 28 (93.3%) |
| கணவனின் குடும்ப உறுப்பினர்கள் மூலம் பிரச்சினைகள் எற்படவில்லை | 17 (56.6 %) | 0 | 13 (43.3%) |
| தனிப்பட்ட நபர்கள், சமூக மூலம் பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்படவில்லை | 11 (36.6 %) | 9 (30% ) | 10 (33.3%) |
| பெற்றோரின் அடிப்படைத் தேவைகள் பிற தேவைகள் திருப்தியான முறையில் நிவர்த்தி செய்யப்படுகின்றன. | 25 (83.3%) | 2 (6.6%) | 3 (10%) |
| பணம் போதியளவு சேமிக்கப்படுகின்றது | 12 (40%) | 1 (3.3 %) | 17 (56.6%) |
| வீண்விரயமான செலவுகள் இல்லை | 13 (43.3%) | 3 (10%) | 14 (46.6%) |

வரைபடம்:01

அட்டவணை:01




மேற்காட்டப்பட்ட அட்டவணையையும் வரைபடத்தையும் பார்க்கும் போது ஆண்கள் வெளிநாட்டிற்கு வேலைவாய்ப்புக்குச் சென்றமையால் குடும்ப உறுப்பினர்கள் எவரும் தமது உடல், உள, அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதில் பூரணமாக திருப்தி நிலையை அடைந்துள்ளனர் எனக் கூறமுடியாதுள்ளது. பெற்றோரின் அடிப்படைத் தேவைகள் நிவர்த்தி செய்யப்படுதல் என்பதில் மட்டும்தான் திருப்தியடைந்துள்ளனர். 83.3 % மானோர் இக்கருத்தைக் குறிப்பிட்டிருந்தனர். இதற்கு பெற்றோர்களுடன் வதியும் குடும்பங்கள் மிகக் குறைவாக இருப்பதும் பெருமளவானோரின் பெற்றோர்கள் உயிருடன் இல்லாமையும் காரணமாகும். ஏனைய தேவைகளில் மிகைத்திருப்தி அடையாதுள்ள விடயங்களில் பிள்ளைகளின் உளவியல் தேவைகள் நிவர்த்தி செய்யப்படுதல் 83.3 % மாகவும் அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதில் பிறரில் தங்காமலிருத்தல் ' 93.3 % மாகவும் குழந்தைகள் நன்னடத்தையுடையவராக இருத்தல் 63.3% மாகவும் உள்ளது. இவ்விடயங்களிலேயே திருப்தி நிலை அடைந்தோருக்கும் திருப்தி நிலை அடையாதோருக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுகின்றது. இதற்கான காரணங்களை ஆராய்ந்த போது தமது கணவன்மார், சகோதரர்கள், மகன்மார் உள்நாட்டில் வேலை செய்து அவர்கள் பெற்ற வருமானத்தை விட தற்போது அவர்கள் அங்கிருந்து அனுப்பும் பணம் போதியதாக இல்லை எனவும், தமது பிள்ளைகளை வழிநடத்த ஒரு குடும்பத் தலைவன் இன்மையால் அவர்கள் தமக்கு கட்டுப்படுவதில்லை எனவும், தீய நண்பர்களுடனான அவர்களின் தொடர்புகள், தந்தை வெளிநாட்டில் இருந்து அனுப்பும் பணம், தொழிநுட்ப உபகரணங்கள் (கையடக்க தொலைபேசி, கம்யூட்டர், லெப்டொப்) போன்றவற்றை தவறாகப் பயன்படுத்துதல் காரணமாக கல்வியில் காட்டும் ஆர்வம் குறைவடைந்துள்ளது எனவும் இதனால் அவர்களின் ஒழுக்க விழுமியங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களின் நடத்தைகள் தமக்கு போதிய திருப்தியளிக்கவில்லையென்றும் பெரும்பாலான குடும்ப உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர்.


தமது சொந்த தேவைகள், பிள்ளைகளின் தேவைகள் நிறைவேற்றுவதில் பிறரில் தங்கியிருக்க வேண்டியிருப்பதாகவும் அவ்வாறு பிற ஆண்கள் தமக்கு உதவிகள் செய்துதர முன்வரும்போது அது சமூகத்தில் வேறு விதமாக பார்க்கப்படுவதாகவும், இந்த உதவிகளை பயன்படுத்தி பிற ஆண்கள் தம்மோடு அதிக நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள விரும்புவதாகவும் அது குடும்பத்திலும், தனிப்பட்ட ரீதியிலும், சமூகத்திலும் சில பிழையான புரிதல்களுகளுக்குக் காரணமாக இருப்பதாகவும் குடும்பத் தலைவிகள் சிலர் குறிப்பிட்டனர்.இவை தவிர பிள்ளைகள் வளர்ந்து வரும் பராயத்தில் தந்தை அருகில் இன்மையால் அவர்களுக்குரிய அன்பு, அரவணைப்பு, பாதுகாப்பு கிடைக்காமையால் அவர்கள் உள ரீதியாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டனர்.

வெளிநாட்டுக்கு சென்றவர்களது பிள்ளைகளில் 15 வயதுக்கும் 22 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களில் 11 பேரின் நடத்தைகளும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. சமூகத் தலைவர்கள், குடும்ப உறுப்பினர்கள் மூலமாக இவர்கள் பற்றிய விபரங்கள் பெறப்பட்டன. மறைமுக அவதானம் மூலமும் சில விடயங்கள் அவதானிக்கப்பட்டன. இதன்படி ஆண்களின் வெளிநாட்டுப்பயணம் அவர்களின் குடும்ப இளைஞர்களின் நடத்தைகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை:02**

| நடத்தைகள் | எண்ணிக்கை |
|---|---|
| மதுப் பாவனை | 5 |
| புகைபிடித்தல் | 5 |
| ஆபாசமான படங்கள் பார்த்தல் | 4 |
| குடும்ப உறுப்பினர்களுக்கு கட்டுப்படாமை | 6 |
| மார்க்க விடயத்தில் அக்கறை | 2 |
| தொழில்நுட்பங்களை சிறப்பாகக் கையாள்தல் | 6 |
| மார்க்கக் கல்வியில் ஆர்வம் காட்டுதல் | 3 |

**வரைபடம்:02**




இந்த அட்டவணை,வரைபடம்வெளிநாட்டுக்குச் சென்றுள்ள ஆண்களின் பிள்ளைகள் நடத்தைப் பிறழ்வுகளுக்கு உட்பட்டிருப்பதனை காட்டக்கூடியதாக உள்ளன. ஏனைய பிள்ளைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்த போது இவர்களின் நடத்தைப் பிறழ்வு அதிகமாகும். மார்க்க விடயங்களைக் கற்றுக் கொள்வதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் ஆர்வம் காட்டுபவர்கள் (10%), மார்க்க விடயங்களில் அக்கறை உள்ளவர்கள் (7%), ஆகும். இது பிள்ளைகளின் ஏனைய நடத்தைப் பிறழ்வுகளுடன் ஒப்பிடும் போது மிகக் குறைவாகும். இந்த பிள்ளைகளின் நடத்தை பிறழ்வுகளுக்கான காரணம் அவர்களது தந்தை அருகில் இன்மையால் குடும்பத்தில் எவருக்கும் கட்டுப்படாத நிலையும் தீய நண்பர்களுடன் அவர்கள் ஏற்படுத்தியுள்ள சகவாசமுமாகும்.

எனவே இந்த ஆய்வின்படி ஆண்களின் வெளிநாட்டுப்பயணம் குடும்ப அமைப்பில் பல பாதகமான தாக்கங்களையே அதிகம் ஏற்படுத்தியுள்ளன என்பதனால் அவற்றை குறைப்பதற்கு அல்லது களைவதற்கு பின்வரும் ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன.

**ஆலோசனைகள்**

- வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்பவர்கள் பணம் சம்பாதித்தலை மாத்திரம் நோக்காகக் கொள்ளாது தமது மனைவி, பிள்ளைகள், ஏனைய குடும்ப அங்கத்தவர்களின் மனோநிலை உடல், உள தேவைகளைப் புரிந்து தாம் சென்ற நோக்கம் நிறைவேறியதும் நாடு திரும்ப வேண்டும்.
- வெளிநாட்டிற்குச் செல்பவர்கள் மீண்டும் மீண்டும் வெளிநாட்டிற்கு சென்று உழைக்க வேண்டும் என்ற மனோநிலையைக் கைவிட வேண்டும். இயன்ற அளவு உள்நாட்டில் ஏதாவது தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முயற்சிக்க வேண்டும்.
- தமது குடும்பத்தினை சரியான ஆண் தலைமைத்துவம் இன்றி வழிநடத்துவது கடினம் என்பதனை ஒவ்வொரு ஆணும், பெண்ணும் உணர்ந்து அதன்படி செயலாற்ற வேண்டும்.
- பிள்ளைகளுடனும் தனது மனைவியுடனும் ஏனைய குடும்ப உறுப்பினர்களுடனும் அடிக்கடி தொடர்புகளை ஏற்படுத்தி அன்பைப் பரிமாறிக் கொள்ள வேண்டும்.
- வீட்டில் இருக்கும் பெண்கள் இயன்றவரை ஆடம்பரசெலவுகளைத் தவிர்த்து கணவனின் வருமானத்திற்கேற்ப வாழப்பழகிக் கொள்ள வேண்டும்.
- பிள்ளைகள் தனது தந்தையின் பணத்தை எதற்கு, எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பெற்றோர் கண்கானிக்க வேண்டும்.
- நீண்ட நாட்கள் குடும்பங்களை பிரிந்து வெளிநாட்டில் தங்கியிருக்காது அடிக்கடி வந்து செல்வது சிறந்தது.
- வீட்டில் இருக்கும் பெண்கள் தமது கணவனின் சொத்துக்களையும், தமது மானத்தையும் பாதகாத்துக் கொள்ள வேண்டும். இயன்றளவு அந்நிய ஆண்களுடனான தொடர்புகளை அவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
- வெளிநாட்டில் இருப்பவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மூலம் தமது மனைவிமாருக்கு பிரச்சினைகள் வராமலும் தமது குடும்ப உறுப்பினர்களுடன் முரண்பாடு ஏற்படாத படியும் நடந்து கொள்வதற்கான ஆலோசனைகளை கணவன்மார் வழங்க வேண்டும்.
- வெளிநாட்டிற்குச் செல்லும் இளைஞர்களை மணம் முடிக்க கூடாது என்ற மனோநிலை சமூகத்தில் இருப்பதால் அவர்கள் இயன்றளவு உள்நாட்டில் தொழில் புரிவது பற்றி சிந்திக்க வேண்டும்.
- பொருளாதார வசதியற்றோருக்கு சமூக பொருளாதார நிறுவனங்களும், சமூகத்தில் வசதிபடைத்தவர்களும் அவர்கள் ஏதேனும் தொழில் முயற்சிகளில் ஈடுபட முடிந்தளவு உதவிகளைச் செய்து கொடுக்க முன்வர வேண்டும்.

**முடிவுரை**

இவ்வாய்வானது ஆண்கள் வெளிநாட்டிற்குச் செல்வதனால் ஏற்படும் குடும்பவியல் தாக்கங்களைக் கண்டறியும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி குறிப்பிட்ட ஆய்வுப்பிரதேசத்தில் ஆண்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பயணம் குடும்பவியல் ரீதியாக ப அதிகளவு பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தியிருப்பதனையும் குடும்ப உறுப்பினர்கள் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்வதில் பூரணமான திருப்தி நிலையை அடையவில்லை என்பதனையும் அதிகமான ஆண்கள் தமது விருப்பத்தின் பேரில் அன்றி நிர்ப்பந்தமான சூழ்நிலைகள் காரணமாகவே வெளிநாட்டிற்கு சென்றுள்ளனர் என்பதனையும் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்வதில் குடும்ப உறுப்பினர்கள் போதியளவு திருப்பதியடையாமையினால் அவை குடும்பத்தில் பல சிக்கல்கள் உருவாக காரணமாக இருந்துள்ளதனையும் அறிய முடிகிறது. இதன்படி இந்த ஆய்வில் பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

- குறிப்பிட்ட ஆய்வுப்பிரதேசத்தில் ஆண்கள் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளமையால் குடும்பவியல் ரீதியாக சாதகமான தாக்கங்களை விட பாதகமான தாக்கங்களே ஏற்பட்டுள்ளன.
- வெளிநாட்டிற்குச் சென்ற ஆண்களில் பெரும்பாலானோர் திருமணம் முடித்தவர்கள் என்பதால் ஏனைய குடும்ப உறுப்பினர்களைவிட அவர்களின் மனைவிமாரும் பிள்ளைகளுமே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- பொருளாதார முன்னேற்றம், அடிப்படைத் தேவைகள் என்பதைத் தவிர ஒரு சீரான குடும்ப உருவாக்கத்திற்கான ஒரு சிறந்த பொருளீட்டல் முறையாக ஆண்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பயணம் அமையவில்லை.
- இஸ்லாம் ஷரீஆவின் வரையறைக்குள் நின்று தொழில் புரிவதனை அனுமதித்திருந்த போதும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பயணங்கள் சில சமயங்களில் அவ்வரையறைகளை மீறுவதாகவும் உள்ளது.

இவ்வாய்வின் மூலம் குறிப்பிட்ட பிரதேசத்தில் பொருளீட்டுவதற்கான விவசாயம் சார்ந்த பல்வேறு வழிமுறைகள் இருந்த போதும் ஆண்கள் வருமானம் ஈட்டுவதற்காக வெளிநாட்டிற்கு செல்வதற்கான காரணங்களும் அதனால் குடும்ப அமைப்பில் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதனையும் அறிய முடிந்தது. எனவே மேற்குறிப்பிட்ட ஆலோசனைகளை வெளிநாட்டில் இருக்கும் ஆண்களும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களும், சமூக நிறுவனங்கள், பொதுமக்கள் ஆகியோரும் பின்பற்றுவதன் மூலம் இதனால் ஏற்படும் பாதிப்புக்களை ஓரளவுக்கேனும் தவிர்க்க முடியும். மேலும் எதிர்காலங்களில் வெளிநாட்டிற்கு செல்வோருக்கும் இவ்வாய்வானது பயனுடைய சில விடயங்களை வழங்கும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**நேர்காணப்பட்டோரும் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டோரும்:**

1) றிபாஸா,ஜே., நிக்கவெவ,(7.10.2014)
2) றிஸாலா,எம்., நிக்கவெவ (7.10.2014)
3) பஸ்லியா,ஜே.,நிக்கவெவ, 10.10.2014)
4) மன்சூர்,எஸ்.,நிக்கவெவ, (4.10.2014)
5) அஸ்லம்,எம்.எம்., நிக்கவெவ, (4.10.2014)
6) மைமூனா,எம்.யூ.எம்., நிக்கவெவ, (2.10.2014)
7) பிச்சையும்மா,ஜே., நிக்கவெவ, (2.10.2014)
8) அப்துல் ராஸிக், நிக்கவெவ, (3.10.2014)
9) ஜீனா உம்மா,எம்., நிக்கவெவ, (7.10.2014)
10) நஸ்ரியா,எஸ்., நிக்கவெவ, (7.10.2014)
11) நஜிபா,எஸ்.,நிக்கவெவ, (7.10.2014)
12) அன்ஸார்,எம்., நிக்கவெவ, (4.10.2014)
13) சபருள்ளாஹ்,ஜெ., நிக்கவெவ (4.10.2014)
14) முஹமட் நஸார், நிக்கவெவ, (4.10.2014)
15) சுல்தான்,எம் சீ., பள்ளித் தலைவர் நிக்கவெவ, (11.10.2014)
16) நிஹாரா,எஸ்.,நிக்கவெவ, (7.10.2014)
17) நளிபா,எஸ்.,நிக்கவெவ, (7.10.2014) (7.10.2014)
18) அப்துல் ஜெப்பார்,யு.,நிக்கவெவ, (8.10.2014)
19) சித்தீக்,எப்.,நிக்கவெவ, (8.10.2014)
20) நிஸாம்டீன்,எஸ்.,நிக்கவெவ, (8.10.2014)